தமிழக சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1968 ஆகஸ்ட் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

* வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Soap factory for Udangudi

* 14 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start a soap factory in the Public sector in Udangudi in Tirunelveli district?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : வருவாயைப் பெருக்க வரிகளைப் போடுவது அரசாங்கத்தின் பழைய காலக் கொள்கையாக இருக்கலாம். புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து அதன்மூலம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள பல இடங்களில் இப்படிப்பட்ட புதிய தொழிற்சாலைகளை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சோப் தொழிற்சாலை பொதுத் துறையிலே உருவாக்குவதுபற்றிய கேள்வி. அதுபற்றி அரசுக்கு எண்ணம் இல்லை என்று கூறினேன். ரெமி பர்ஃப்யூமர்ஸ் பிரைவேட் லிமிடட், ஈஸ்ட் ஏஷியாடிக் பிரைவேட் லிமிடெட் போன்ற தனியார் நிறுவனங்கள் சோப் தயாரித்துக் கொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் துவங்குவதற்கு லைசன்ஸ்கள் வழங்கப்படுகின்றன. இப்பொழுது இருக்கின்ற தொழிற்சாலைகள் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். தேவைப்படுகின்ற மூலப் பொருள்கள் கிடைப்பதால், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தேவையான அளவிற்குத் தயாரிப்பதாலும், தேவையை நிறைவேற்றக் கூடிய அளவிற்கு அவை இருக்கிற காரணத்தினாலும் பொதுத் துறையிலே அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் துவக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. பொது மக்களுக்குத் தேவைப்படுகின்ற பொருளாக அது இருந்து, வேறு எந்தத் தொழிற்சாலையிலும் அப்படிப்பட்ட பொருள்கள் தயாராகாமல் இருந்தால், அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அரசு எடுத்து நடத்தலாம். லைசென்ஸ் வாங்கித்தான் அந்தத் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்றிருந்தது. இப்பொழுது லைசென்ஸ் வாங்காமலேயே அந்தத் தொழிலைச் செய்யலாம் என்று இந்திய அரசு விதியைத்

தளர்த்தி இருக்கிற காரணத்தாலே அவரவர்கள் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் துவக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, பொதுத் துறையில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் துவக்க அரசு முன்வரவில்லை.

St. Xavier's High School Building, Palayamkottai

* 15 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the St. Xavier's High School, Palayamkottai, Tirunelveli district has requested the Director of Secondary Education for permission to utilise its General Fund for the extension of the school building; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இயக்குனர் தேவையான சம்மதம் அளித்துள்ளனர்.

THIRU T. MARTIN : Sir, in view of the fact that under articles 26 and 30 of the Constitution of India which guarantee fundamental rights to establish institutions by various religious minorities in any State in India, will not the requirement under a rule, viz., to get permission from the Director to utilise the funds belonging to that institution for development of educational activities of that institution, amount to an infringement of the fundamental rights guaranteed to those institutions under these articles of the Constitution?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அந்தந்தக் கல்வி நிறுவனங்கள், அவர்களிடத்திலே வைத்திருக்கிற உபரி நிதியை, கட்டடங்கள் கட்டுவதற்கும், பள்ளிக்கூடங்களில் தேவைப்படுகின்ற வசதிகளைச் செய்து கொள்ளுவதற்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால், இயக்குநர் அவர்களுடைய அனுமதி பெற்றதின் பேரில்தான் செய்ய வேண்டியிருக்கிறது. நிதி வைப்புக் குறைவாக இருக்குமானால், அனுமதி தரப்படுவதில்லை. கல்வி நிலையங்கள் சரியாக நடைபெற்று, அந்தக் கல்வி நிலையத்திலே உபரி வைத்திருந்து அதற்குக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்பார்களானால், அதற்கு இயக்குநர் அவர்வகளின் அனுமதி வேண்டியிருக்கிறது. அதில் எந்த விதமான தவறும் இல்லை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலுள்ள கிருஸ்துவ மிஷனரியினர் மிகச் சிறப்பாகத் தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியை நல்ல முறையில் நடத்தி வருகின்றனர். அங்கே ஏறக்குறைய இரண்டாயிரம் மாணவர்கள் படித்துக் கொண்டு வருகிறார்கள். அதற்கு ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று கூறி அந்தப் பள்ளியின் உபரி நிதியிலிருந்தே அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளனர். அதைக் கொடுப்பதற்கு அரசு யோசிக்குமா?